மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பழமொழி சொல்லுவார்கள், "கண்ணில் மிளகாய்ப் பொடியைத் தூவிவிட்டு ஓடிவிட்டார்கள்" என்று அவர்களுக்கு எப்படி மிளகாய்ப் பொடி கிடைத்தது என்பதுபற்றி இப்போது விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையிலிருந்து அந்த 5 குற்றவாளிகளும் கொள்ளையடித்த பயங்கரமான குற்றத்தைச் செய்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. அந்த 5 பேர்களை எத்தனை காவலர்கள் கொண்டுபோனார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் ஆரம்பத்திலேயே சொல்லி இருக்கிறேன். எத்தனை காவலர்கள் அழைத்துச் சென்றார்கள் என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. ஐந்து கைதிகளை அழைத்துச் செல்லப் போதுமான காவலர்கள் இருந்தாலும், அவர்களிடமிருந்து துப்பாக்கியைத் திடீரென்று பிடுங்கிக்கொண்டதால், அவர்களால் ஒன்றும் செய்ய முடியாமல் போய்விட்டது.

Building for International Institute of Tamil Studies

* 3. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have allotted any plot of land for raising the construction of the International Institute of Tamil Studies; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) பன்னாட்டுத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அலுவலகக் கட்டடம் கட்ட உரிய இடத்தில் நிலத்தை ஒதுக்கும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது.

THIRU N DENNIS : May I know whether experts in the language from other countries also would be invited to make their contributions?

1973 ஆகஸ்ட் 4]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்த நிறுவனத்தின் கௌரவத் தலைவராக மதுரைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் இருந்து வருகிறார்கள். மற்றைய நாட்டு மொழி நூல் வல்லுநர்களோடு அது தொடர்புகொண்டு வருகிறது. இப்போது அவர்கள் ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறார்களா என்று தெளிவு இல்லை. யுனஸ்கோ நிறுவனத்தின் உதவி பெற்று இங்கேயிருந்து சிலர் வெளி நாட்டுக்குச் சென்று தனிப் பயிற்சி பெற்று வருகிறார்கள். ஆனால் உலக நாடுகள் மொழி வல்லுநர்களோடு தொடர்பு கொள்ளும் நோக்கத்தை இந்த நிறுவனம் கொண்டிருக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, இதற்காக ஒதுக்கப்படும் நிலம் எந்த இடத்தில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பாலிடெக்னிக் காம்பஸ்—தொழில் நுட்பக் கல்லூரி சுற்றடைப்பில் 6 ஏக்கர் நிலம் ஒதுக்கப்படவேண்டுமென்று தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அங்கேயுள்ள கட்டடத்தில் தற்காலிகமாக இப்போது வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கட்டடத்தையும் அதைச் சுற்றியுள்ள இடத்தையும் அந்த நிறுவனத்திற்கு ஒதுக்கித் தந்தால் சரியாக இருக்கும் என்ற கருத்தில் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அந்த இடத்தில் ரூ. 5,25,000 மதிப்பீட்டுச் செலவில் கட்டடம் எழுப்புவதற்கான செயற் குறிப்பையும் அந்த நிறுவனத்தின் தலைமை நிர்வாகி தயாரித்து வைத்திருக்கிறார்.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவரவர்களே, தமிழ் ஆராய்ச்சி நிலையம் இதுவரை ஆற்றியுள்ள பணிகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடவும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Education whether this Government is giving financial aid to this International Institute of Tamil Studies and if so, whether it is annual grant or lump-sum grant?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஆண்டுதோறும் இந்த நிறுவனத்திற்காக மாநில அரசு மானியம் அளித்து வருகிறது. இதைத்தவிர வெளிநாட்டில் சென்று இரண்டு பேராசிரியர்கள் ஒரு 6 மாத காலம், ஓராண்டுக் காலம் பயிற்சி பெறுவதற்கும் யுனஸ்கோ உதவி அளித்து வருகிறது. அந்த நிறுவனத்திற்கு உதவி அளிக்க வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது. கட்டடம் கட்டுவதற்காக ரூ. 2,40,000-ஐ இந்திய அரசு மொழி வளர்ச்சிக்காக ஒதுக்கித் தரும் ரூ. 1 கோடியில் ஒதுக்கித் தர வேண்டுமென்றும் மத்திய அரசை இந்த மாநில அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : தலைவரவர்களே, இந்த இடத்தைத் தேர்ந்தெடுப்பதில் தமிழ் வல்லுநர்கள் யாரேனும் இது சம்பந்தமாக கலந்து ஆலோசிக்கப்பட்டார்களா? சங்கம் வளர்த்த தமிழ் மதுரையம்பதியிலே இதை நிறுவ ஆலோசனை செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதிலே பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள் இடம் பெற்று இருக்கிறார்கள். டாக்டர் மு. வரதராசனார் அதனுடைய கௌரவத் தலைவர். இதிலே பேராசிரியர் டி. பி. மீனாட்சிசுந்தரம் போன்றவர்கள் இருந்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இது பன்னாட்டுத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனமாக இருப்பதாலும், வெளி நாட்டு வல்லுநர்கள் வந்து ஆராய்ச்சிகள் செய்வதற்கும், பல்கலைக் கழகங்களோடு தொடர்புகொள்வதற்கு சென்னைதான் ஏற்ற இடம் என்று கருதப்படுகிற காரணத்தாலும், பாலிடெக்னிக் காம்பஸ்ஸில் இடம் ஒதுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

National Cadet Corps

* 4. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to intensify the National Cadet Corps training in this State; and

(*b*) if so, the details thereof?